# அவிநாசி அருகே பூங்காவுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் குப்பை கொட்ட எதிர்ப்பு

**அவிநாசி, செப்.1:** அவிநாசி -பழங்கரை கிருஷ்ணா நகரில் பூங்காவுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் குப்பை கொட்ட எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் அவிநாசி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை முற்றுகையிட்டு மனு அளித்தனர்.

இது குறித்து மனு அளிக்க வந்த பழங்கரை ஊராட்சி கிருஷ்ணா நகர் பகுதி மக்கள் கூறியதாவது: அங்கீகாரம் பெற்ற மனைப் பிரிவு பகுதியில் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் பயன்படுத்தக் கூடிய பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் மூன்று பெரிய குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

குப்பை கொட்டுவதற்காக தோண்டப்பட்டுள்ள குழிகளை அகற்றி, பூங்கா அமைக்க ஏதுவாக இடத்தை சீரமைத்து தரவேண்டும். மேலும், அந்த இடத்தில் அழகிய பூங்காவை அமைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் குடியிருப்போர் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், இதற்கு மாறாக குப்பைகள் கொட்டப்படுவதும், குழிகள் தோண்டப்படுவதும் எங்களுக்கு மிகுந்த இடையூறாக உள்ளது. அவ்வாறு குப்பை கொட்டப்பட்டால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசி, சுகாதார சீர்கேடும் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

எனவே பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் நலனைக் கருத்தில் கொண்டு பூங்காவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தோண்டப்பட்டுள்ள மூன்று குழிகளையும் உடனடியாக மூடி சமன்படுத்தி, பூங்கா அமைத்துத் தரவேண்டும் என்றனர்.

இதையடுத்து மனுவை பெற்றுக்கொண்ட ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தினர் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

## ஆர்ப்பாட்டம்...

உத்தரகண்ட் மாநிலத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீது பொய் வழக்கு தொடரப்பட்டதை கண்டித்து பல்லடத்தில் மாவட்டத் தலைவர் செல்வகுமார் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற நகரத் தலைவர் ஈஸ்வரமூர்த்தி, பல்லடம் வட்டாரத் தலைவர்கள் புண்ணியமூர்த்தி, கணேசன் உள்ளிட்ட காங்கிரஸ் கட்சியினர்.

# திருப்பூர் வடக்கு உழவர் சந்தையை புனரமைக்க ரூ.18.50 லட்சம் நிதி ஒதுக்கீடு

**திருப்பூர், செப்.1:** திருப்பூர் வடக்கு உழவர் சந்தையை புனரமைக்க ரூ.18.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் நவீன உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என சட்டப்பேரவையில், திருப்பூர் வடக்கு சட்டப்பேரவை உறுப்பினர் சத்தியபாமா விடுத்த கோரிக்கையை அடுத்து, உழவர் சந்தையை புனரமைக்க ரூ.18.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டத்தில் புதிய பேருந்து நிலையத்தின் பின்புறம் அமைந்துள்ள இந்த உழவர் சந்தை கடந்த 26 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. இங்கு சராசரியாக நாளொன்றுக்கு சுமார் 120 விவசாயிகள், 20 முதல் 25 மெட்ரிக் டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனை செய்து வருகின்றனர்.

இந்த சந்தையில் தரைத் தளம் மற்றும் மேற்கூரைகள் பழுதடைந்துள்ளதை அறிந்த சட்டப்பேரவை உறுப்பினர் சத்தியபாமா, இது குறித்து சட்டப்பேரவையில் விடுத்த வேண்டுகோளை ஏற்று தமிழக வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் வினோத், உழவர் சந்தையை புனரமைக்க ரூ.18.50 லட்சம் ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளார்.

# அருந்ததியருக்கு 6% உள் இடஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி முதல்வருக்கு மனு

**காங்கயம், செப்.1:** அருந்ததியர் சமூக மக்களுக்கு 6 சதவீதம் உள் இடஒதுக்கீடு வழங்க வலியுறுத்தி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆதித்தமிழர் ஜனநாயகப் பேரவையின் தலைவர் அ.சு.பெளத்தன், முதல்வர் ஜோசப் விஜய்க்கு செவ்வாய்க்கிழமை அனுப்பிய மனுவில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தில் உள்ள சேலம், ஈரோடு, நாமக்கல், திருப்பூர், கரூர், கோவை, நீலகிரி, தருமபுரி உள்ளிட்ட 10 மாவட்டங்களில், பட்டியல் இன மக்களின் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு, இட ஒதுக்கீடு, அரசியல் என அனைத்து நிலைகளிலும் மிகவும் பின்தங்கிய சமூகமாக அருந்ததியர் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாடு முழுவதும் 60 லட்சம் அருந்ததியர் மக்கள் உள்ளனர். தமிழ்நாட்டில் வசிக்கும் பட்டியல் இனத்தவர் பிரிவில் இருக்கும் ஆதி திராவிடர், தேவேந்திரகுல வேளாளர் ஆகிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் கடந்த நூறு ஆண்டுகளுக்கு முன்பு கல்வி பெறுகின்ற வாய்ப்புகள் பெற்றிருந்த காரணத்தால், அவர்களோடு போட்டி போட்டு அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர்களால் அரை நூற்றாண்டுக்கு மேலாக உரிய இடஒதுக்கீட்டு உரிமையைப் பெற முடியவில்லை.

இந்நிலையில், கடந்த 2008-ஆம் ஆண்டு அன்றைய திமுக ஆட்சியில் அருந்ததியர் சமூகத்துக்கு 3 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. இந்த உள் இடஒதுக்கீட்டுக்குப் பின்பு மருத்துவம், பொறியியல் என அனைத்துத் துறைகளிலும் அருந்ததிய சமூக மாணவ, மாணவிகள் அரசுப் பணிகளில் சேர்கின்ற வாய்ப்பு அதிகமாக கிடைத்தது.

50 ஆண்டுகளுக்கு மேலாக அருந்ததியர் சமூகத்துக்கு 6 சதவீத உள் இடஒதுக்கீடு வேண்டுமென கோரிக்கை வைத்தும், இதற்கென பல போராட்டங்களை நடத்தி வந்த நிலையிலும் வெறும் 3 சதவீத உள் இடஒதுக்கீடு மட்டும் அன்றைய திமுக அரசு வழங்கியது.

எனவே அரசியல், மருத்துவம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மிகவும் கீழ் நிலையில் இருந்து வரும் அருந்ததியர் சமூக மக்களுக்கு 6 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்கி, சமூக நீதிக்குள் சம நீதி அளித்து, இம்மக்களின் உரிமையைக் காப்பதற்கு தமிழ்நாடு முதல்வர் ச.ஜோசப் விஜய் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**UJJIVAN SMALL FINANCE BANK**

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: SF எண்.117, கதவு எண்.168 [3/2], UKPN காம்ப்ளக்ஸ், பழனி ரோடு, உடுமலைப்பேட்டை, தமிழ்நாடு-642126

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை கவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) கவாதீனம் எடுத்த தேதி | கடன் நிலுவைத் தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித் தொகை (EMD) |
|---|---|---|---|---|
| 1189210170000017 / 1. Mr.ராதாகிருஷ்ணன் 2. Mrs.மஞ்சுளா | (i) 10.01.2025 & 01.01.2025 அன்றுள்ளபடி ₹ 12,12,288/- (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து பன்னிரண்டாயிரத்து இருநூற்று எண்பத்தெட்டு மட்டும்) (ii) அடையாளூர்வ கவாதீனம் - 13.05.2025 & நேரடி சுவாதீனம் - 21.02.2026 | 29.08.2026 அன்றுள்ளபடி ₹ 17,35,964.66 (ரூபாய் பதினேழு லட்சத்து முப்பத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து நான்கு மற்றும் பைசா அறுபத்து ஆறு மட்டும்) | ₹ 14,53,000/- (ரூபாய் பதினான்கு லட்சத்து ஐம்பத்து மூன்றாயிரம் மட்டும்) | ₹ 1,45,300/- (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்து ஐந்தாயிரத்து முன்நூறு மட்டும்) |

சொத்து விவரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைப்பேட்டை சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, நத்தம் S.F.எண்.55, தும்பலபட்டி கிராமம், உடுமலைப்பேட்டை தாலுகா என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கில் 42 அடி, கிழக்கு மேற்காக தெற்கில் 33 அடி, வடக்கு தெற்காக கிழக்கில் 55 அடி, வடக்கு தெற்காக மேற்கில் 46 அடி ஆக மொத்தம் 1932 சதுர அடி நிலம் அதிலுள்ள கட்டிடம், பொது சாலையை உபயோகிக்கும் உரிமை மற்றும் அனைத்து இதர அனுபந்தங்கள். அதன் கதவு எண்.2/48 சொத்து வரி 376 மற்றும் அதனுடன் இணைந்த தூண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கருப்புசாமி-க்கு சொந்தமான வீட்டிற்கு வடக்கு, பழனி போயன் மற்றும் மற்றவர்களுக்கு சொந்தமான வீட்டிற்கு தெற்கு, காளிமுத்து, பழனிசாமி ஆகியோருக்கு சொந்தமான வீட்டிற்கு கிழக்கு, வடக்கு தெற்கு வழிப்பாதைக்கு மேற்கு.

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 23.09.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை**

| விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி | சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் |
|---|---|
| தேதி: 22.09.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை | 21.09.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை |

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டீஜோ சாஜன் – 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குநரான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறுவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிட்டலாம் மற்றும் விலைக்குறிப்பிட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's-7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 02.09.2026 ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்



**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,**
மண்டல அலுவலகம், திருப்பூர்.

எங்களது **கொசூர் கிளை** அலுவலகத்திற்கு உள் அலங்கார வேலைபாடு, எலெக்ட்ரிகல் மற்றும் ஏர் கண்டிஷனிங் வேலைக்கு நன்கு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன.

**கடைசி தேதி : 14.09.2026 / மதியம் 3.00 மணி**

இதர விவரங்களுக்கு எங்களது வலைதளம் : **www.iob.bank.in**-ஐ பார்வையிடவும்

முதன்மை மண்டல மேலாளர்,
**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி,**
மண்டல அலுவலகம் : 120-123, அனு பிசினஸ் சென்டர், காலேஜ் ரோடு, திருப்பூர் - 641602.
போன் : 0421 - 2213166


# கார் மீது இருசக்கர வாகனம் மோதி தொழிலாளி உயிரிழப்பு

**வெள்ளக்கோவில், செப். 1:** வெள்ளக்கோவில் அருகே கார் மீது மோதியதில் இருசக்கர வாகன ஓட்டுநர் உயிரிழந்தார்.

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், பழையூர் கம்பர் தெருவைச் சேர்ந்தவர் சந்திரசேகரன் (42). இவர் திருப்பூர் மங்கலத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் மிஷின் டெக்னீஷியனாக பணியாற்றி வந்தார்.

இவர் வேலை தொடர்பாக வெள்ளக்கோவில் - கரூர் சாலை, ஒத்தக்கடை பழனிசாமி நகர் பிரிவு அருகே இருசக்கர வாகனத்தில் திங்கள்கிழமை இரவு சென்று கொண்டிருந்தார்.

அப்போது, அவருக்கு முன்னால் சென்ற காரின் ஓட்டுநர் எவ்வித சிக்னலும் இன்றி திடீரென காரை நிறுத்தி கார் கதவைத் திறந்துள்ளார். அப்போது பின்னால் வந்த சந்திரசேகரனின் இருசக்கர வாகனம், கார் கதவு மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் கீழே விழுந்து பலத்த காயமடைந்த சந்திரசேகரனை அருகிலிருந்தவர்கள் மீட்டு காங்கயம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். ஆனால் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

இது குறித்து சந்திரசேகரனின் மனைவி, போதும் பொன்னு அளித்த புகாரின்பேரில், காரை அலட்சியமாக ஓட்டி விபத்தை ஏற்படுத்திய நீலகிரி மாவட்டம், குன்னூர் மவுண்ட் சாலை அக்பர் ஹவுஸ் பகுதியைச் சேர்ந்த பிரபு மீது வெள்ளக்கோவில் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


**பாரத ஸ்டேட் பாங்கு**
வீட்டுக்கடன் மையம், திருப்பூர்
ஈஸ்வரன் ஆர்கேட், முதல் தளம், 544, பல்லடம் மெயின் ரோடு,
எதிர் சுலோச்சனா மில்ஸ்.தென்னம்பாளையம், திருப்பூர் 641 604

**மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**
(அசையா சொத்து குறித்து)

வங்கியின் கீழ் வசூலிக்கப்படும் அசையும் / அசையா சொத்துக்களை விற்பனை செய்தல் நிதிச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம், 2002 அமலாக்கம்.

பாரத ஸ்டேட் வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக கையெழுத்திடப்பட்ட இவர் **18.09.2024** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டு, **25.11.2024** அன்று சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13 (4) இன் கீழ் பின்வரும் சொத்துக்களை கையகப்படுத்தியுள்ளார்.

வங்கியின் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்ட வழக்குகளில் வசூலிக்கப்பட்ட சொத்துக்களின் மின்னணு ஏலம் (சர்ஃபாசி சட்டம், 2002 இன் கீழ்) "இருந்தது இருந்தபடி, உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் நடத்தப்படும் என்று பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. கடன் வாங்கியவரின் பெயர்: **திருமதி. S.பிரேமா, க/பெ சசிகுமார், தள எண் 8, ஸ்ரீ கோகுலம் பார்க், வெங்கடேல்வரா பள்ளி அருகில், வேட்டுவபாளையம், அவிநாசி, திருப்பூர்- 642 670. திரு. சசிகுமார், தள எண் 8, ஸ்ரீ கோகுலம் பார்க், வெங்கடேல்வரா பள்ளி அருகில், வேட்டுவபாளையம், அவிநாசி, திருப்பூர்- 642 670. சொத்து விற்பனை மூலம் வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை : ரூ. 14,67,709/- (ரூபாய் பதினான்கு லட்சத்து அறுபத்தேழாயிரத்து எழுநூற்று ஒன்பது மட்டும்) 25.11.2024 தேதியின்படி வங்கியின் கணக்கில் இதில் HTL கடன்: ரூ. 13,77,990 மற்றும் Suraksha கடன்: ரூ. 89,719** மேலும் அதற்கான வட்டி, செலவுகள் மற்றும் இதர கட்டணங்களுடன்.

**சொத்து விவரம்**

திருப்பூர் பதிவு மாவட்டம், அவினாசி சார்-பதிவாளர் அலுவலக எல்லை, அவினாசி வட்டம், வெட்டுவபாளையம் கிராம ஊராட்சி எல்லைக்குட்பட்ட வெட்டுவபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள நிலம் மற்றும் குடியிருப்பு கட்டிடம். சர்வே எண் 266/4-ல் (மொத்த பரப்பு 3.94 ஏக்கர்) மேற்குப் பகுதி. சர்வே எண் 266/4B-ல் உள்ள பழனிசாமி கவுண்டருக்குச் சொந்தமான நிலத்திற்கு மேற்கே. சர்வே எண் 266/3-ல் உள்ள சங்கரப்ப கவுண்டருக்குச் சொந்தமான நிலத்திற்கு கிழக்கே, சர்வே எண்கள் 267/3A மற்றும் 267/2A-க்கு வடக்கே மற்றும் முரியாண்டம்பாளையம் கிராம பட்டா நிலத்திற்கு தெற்கே அமைந்துள்ள 2.38 ஏக்கர் (0.96.5 ஹெக்டேர்) பரப்புள்ள நிலம் (தற்போதைய உட்பிரிவு எண் SF 266/4A) மேலும் சர்வே எண் 267/3-ல் (மொத்த பரப்பு 3.46 ஏக்கர்) மேற்குப் பகுதி சர்வே எண் 266/3B-ல் உள்ள பழனிசாமி கவுண்டருக்குச் சொந்தமான நிலத்திற்கு மேற்கே. சர்வே எண் 266/2A மற்றும் 2B-க்கு கிழக்கே. சர்வே எண் 266/4A-க்கு தெற்கே மற்றும் சர்வே எண் 267/3A-ல் உள்ள பி.காளியம்மாளுக்குச் சொந்தமான 0.40 ஏக்கர் நிலத்திற்கு வடக்கே அமைந்துள்ள 1.06 ஏக்கர் (0.43.0 ஹெக்டேர்) பரப்புள்ள நிலம் (தற்போதைய உட்பிரிவு எண் SF 267/3A) மேற்கண்ட இரு நிலங்களின் மொத்த பரப்பளவான 3.44 ஏக்கர் (1.39.5 ஹெக்டேர்) நிலத்தில் அமைக்கப்பட்ட "ஸ்ரீ கோகுலம் பார்க்" (Sri Gokulam Park) என்ற மனையிடத் திட்டத்தில் உள்ள மனை எண் 8, மனை எண் 9-க்கு வடக்கே, மனை எண் 7-க்கு தெற்கே, 25 அடி அகலமுள்ள வடக்கு-தெற்கு மனைத் திட்டச் சாலைக்கு கிழக்கே மற்றும் சர்வே எண் 266/4B-க்கு மேற்கே அமைந்துள்ளது, கிழக்கு-மேற்காக இருபுறமும் 40 அடி அளவும், வடக்கு-தெற்காக இருபுறமும் 30 அடி அளவும், மொத்த பரப்பளவு 1200 சதுர அடி (111.52 சதுர மீட்டர்) கொண்ட மனை மற்றும் அதன்மீது அமைந்துள்ள கட்டிடக் கட்டுமானங்களுடன் கூடிய சொத்துகளும் உரிமைகளும் சகிதம்.

**ரிசர்வ் விலை: ரூ. 24,14,000/- [ரூபாய் இருபத்து நான்கு லட்சத்து பதினான்காயிரம் மட்டும்]**

| | |
|---|---|
| மின்னணு ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 05.10.2026 (திங்கட்கிழமை) காலை 11.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை, விற்பனை முடியும் வரை தலா ஐந்து நிமிடங்கள் நேர நீட்டிப்பு வழங்கப்படும் |
| ரிசர்வ் விலை | ரூ.24,14,000/- |
| (EMD) (ரிசர்வ் விலையில் 10%) | ரூ.2,41,400/- |
| ஏலத்தொகை | ரூ.10,000/- |
| சொத்தினை பார்வையிடும் நாள் | 25.09.2026 (வெள்ளிக்கிழமை) முதல் (காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை) |
| சொத்து விபரங்கள் குறித்து தொடர்புக்கு | 78069 64087 |
| வங்கி கிளையில் மின்னணு விண்ணப்பம் மற்றும் முன்பணம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் | 03.10.2026 அன்று அல்லது அதற்கு முன் மாலை 4.00 மணி வரை |

விண்ணப்பதாரர்கள் / ஏலதாரர்கள் EMD தொகையை NEFT / RTGS மூலம் SBI அவிநாசி டவுன் கிளை கணக்கின் பெயரில் கணக்கு எண்: 37608151185 இல் டெபாசிட் செய்ய வேண்டும். குறியீடு: SBIN0040551 அல்லது திருப்பூரில் உள்ள SBI அவிநாசி டவுன் கிளையின் பெயரில் வரையப்பட்ட டிமாண்ட் டிராஃப்ட் மூலம் தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலிடப்பட்ட வங்கியில் செலுத்த வேண்டும்.

**விற்பனை பற்றிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

இந்த மின்னணு ஏலமானது "உள்ளபடியே" (As is where is / As is what is) என்ற அடிப்படையில் "இணையம்" வழியாக நடத்தப்படுகிறது. இவ்வேலமானது, வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநரான M/s. e-Procurement Technologies Ltd (ETL) மூலம் https://bankauctions.com என்ற இணையதளத்தில் நடத்தப்படும்.

மின்-ஏலத்திற்கான விண்ணப்ப ஆவணம் (இதில் மின்-ஏல ஏலப் படிவம், உறுதிமொழிப் பத்திரம் மற்றும் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கும்) என்ற இணையதளத்தில் கிடைக்கிறது. கூடுதல் விவரங்களுக்கு, M/s. CL India Pvt Ltd-ஐத் தொடர்பு கொள்ளவும். தொடர்பு எண்: 7010067800; மின்னஞ்சல்: support@bankauctions.com. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவு மற்றும் தகவலின்படி, சொத்தின் மீது எந்தவிதமான வில்லங்கமும் (நுஊரஅசெயஊநு) இல்லை. இருப்பினும், ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள், தங்கள் ஏலத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன், சொத்தின் மீதான வில்லங்கம், சொத்து உரிமை மற்றும் சொத்து தொடர்பான உரிமைகோரல்கள் அல்லது நிலுவைத் தொகைகள் குறித்துத் தாங்களாகவே சுயாதீனமாக விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த மின்-ஏல விளம்பரம் வங்கியின் எந்தவொரு உறுதிமொழியையோ அல்லது பிரதிநிதித்துவத்தையோ கொண்டதாகவோ அல்லது அவ்வாறு கருதப்படக்கூடியதாகவோ அமையாது. வங்கிக்குத் தெரிந்த அல்லது தெரியாத, தற்போதுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனைத்து வில்லங்கங்களுடனும் இந்தச் சொத்து விற்பனை செய்யப்படுகிறது. மூன்றாம் தரப்பினரின் உரிமைகோரல்கள், உரிமைகள் அல்லது நிலுவைத் தொகைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநர் (Secured Creditor) எந்த வகையிலும் பொறுப்பேற்க மாட்டார். இந்த விற்பனையானது 'நிதிச் சொத்துகளின் பாதுகாப்பாக்கம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002' (SARFAESI Act)-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. ஏலத்தில் வெற்றிபெறும் நபர்/வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் பிரிவு 194-IA-ன் படி விற்பனைத் தொகையில் 1% TDS-ஐப் பிடித்தம் செய்து, Form 26QB-ல் சலானைச் சமர்ப்பித்து அதைச் செலுத்த வேண்டும். மேலும் TDS சான்றிதழின் அசல் ரசீதை வங்கியிடம் சமர்ப்பிக்க வேண்டும். மின்-ஏலத்தின் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் https://bankauctions.com என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

**தேதி : 01.09.2026**
**இடம் : திருப்பூர்.**
அதிகாரம் பெற்ற அலுவலர்
பாரத ஸ்டேட் பாங்கு, வீட்டுக்கடன் மையம், திருப்பூர்



**பாரத ஸ்டேட் பாங்கு**
வீட்டுக்கடன் மையம், திருப்பூர்
ஈஸ்வரன் ஆர்கேட், முதல் தளம், 544, பல்லடம் மெயின் ரோடு,
எதிர் சுலோச்சனா மில்ஸ்.தென்னம்பாளையம், திருப்பூர் 641 604

**மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு**
(அசையா சொத்து குறித்து)

வங்கியின் கீழ் வசூலிக்கப்படும் அசையும் / அசையா சொத்துக்களை விற்பனை செய்தல் நிதிச் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம், 2002 அமலாக்கம்.

பாரத ஸ்டேட் வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியாக கையெழுத்திடப்பட்ட இவர் **15.12.2025** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டு, **03.03.2026** அன்று சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13 (4) இன் கீழ் பின்வரும் சொத்துக்களை கையகப்படுத்தியுள்ளார்.

வங்கியின் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக கீழே குறிப்பிடப்பட்ட வழக்குகளில் வசூலிக்கப்பட்ட சொத்துக்களின் மின்னணு ஏலம் (சர்ஃபாசி சட்டம், 2002 இன் கீழ்) "இருந்தது இருந்தபடி, உள்ளது உள்ளபடி" என்ற அடிப்படையில் நடத்தப்படும் என்று பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. கடன் வாங்கியவரின் பெயர்: **திரு.P.பூவராகவன், 538 அம்மாம்பாளையம், மேற்கு மாரியம்மன் கோவில் அருகில், ராஜபாளையம், பெத்தநாயக்கன்பாளையம், சேலம் 636115, திருமதி.P.நித்யா, க/பெ பூவராகவன், 538 அம்மாம்பாளையம், மேற்கு மாரியம்மன் கோவில் அருகில், ராஜபாளையம், பெத்தநாயக்கன்பாளையம், சேலம் 636115. சொத்து விற்பனை மூலம் வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை : ரூ. 21,57,034/- (ரூபாய் இருபத்தியொரு லட்சத்து ஐம்பத்தேழாயிரத்து முப்பத்து நான்கு மட்டும்) 02.03.2026 தேதியின்படி வங்கியின் கணக்கில் இதில் (HTL கடன் : ரூ. 11,82,756 மற்றும் HTL கூடுதல் கடன்: ரூ. 9,74,278)** மேலும் அதற்கான வட்டி, செலவுகள் மற்றும் இதர கட்டணங்களுடன்.

**சொத்து விவரம்**

திருப்பூர் பதிவு மாவட்டம், அவினாசி சார்-பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்ட, திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், திருமுருகன்பூண்டி பேரூராட்சி, ராக்கியாபாளையம் கிராமத்தில் அமைந்துள்ள நிலம் மற்றும் குடியிருப்பு கட்டிடம்: சர்வே எண் 147-ல் அமைந்துள்ள 0.43 ஏக்கர் நிலம்: எல்லைகள்: தெற்கே: சர்வே எண் 148, வடக்கே: சர்வே எண் 146/1, கிழக்கே: சர்வே எண் 136, மேற்கே: கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலம் பரப்பளவு: 0.43 ஏக்கர் (0.17.4 ஹெக்டேர்) மேலும், சர்வே எண் 146/1-ல் உள்ள 7.94 ஏக்கரில், 1.57 ஏக்கர் நிலம் (பட்டா எண் 57): எல்லைகள்: தெற்கே: சர்வே எண் 148, வடக்கே: வெங்கடாசலம் மற்றும் அவரது பங்குதாரர்களுக்குச் சொந்தமான நிலம் கிழக்கே: மேலே குறிப்பிடப்பட்ட நிலம் மற்றும் சர்வே எண் 146/1 மேற்கே: சர்வே எண் 145/2 பரப்பளவு: 1.57 ஏக்கர் (0.63.5 ஹெக்டேர்) மேற்கண்ட இரண்டு நிலப்பகுதிகளையும் (மொத்தம் 2.00 ஏக்கர் / 0.80.5 ஹெக்டேர்) வீட்டு மனைகளாகப் பிரித்து 'ஈடன் கார்டன்' **(Eden Garden)** எனப் பெயரிடப்பட்டதில், மனை எண் 13-ல் அமைந்துள்ள சொத்து: எல்லைகள்: வடக்கே: 25 அடி அகலமுள்ள கிழக்கு-மேற்கு லேஅவுட் சாலை, தெற்கே: மனை எண் 16, மேற்கே: மனை எண் 14, கிழக்